D.V.C 11/2019
PW1– பிரதிபா
Date: 16.08.2022

எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் திருமணம் ஆனது முதல் நாங்கள் சந்தோசமாக இருந்து வந்தோம் என்றால் சரிதான். திருமணத்தின்போது எனக்கு 30 பவுன் நகை போட்டார்கள். நான் ஏற்கனவே முதல் சாட்சிய விசாரணையில் மேற்படி 30 பவுன் நகை போட்டதாகத்தான் சொல்லியுள்ளேன்.

2. எனக்கு வளைகாப்பு எப்போது நடைபெற்றது என்றால் மே–2017 ம் ஆண்டு நடைபெற்றது. நான் வளைகாப்பின்போது அனைத்து நகைகளையும் போட்டு இருந்தேன் என்றால் இல்லை. நான் வளைகாப்பு அன்று என்ன என்ன நகைகைள் அணிந்திருந்தேன் என்றால் நெக்லஸ், டாலர் செயின் ஆகியவைகளை அணிந்திருந்தேன். இரண்டும் சேர்த்து சுமார் ஐந்து பவுன் இருக்கும்.

3. வளைகாப்பின்போது தோடு அணிந்திருந்தேன் என்றால் சரிதான். தோடு சுமார் முக்கால் பவுன் இருக்கும். நான் திருமணமாகி சென்ற போது என் கணவரின் வீட்டில் வீட்டு வேலை நடந்து கொண்டிருந்ததா என்றால் இல்லை. வீடு கட்டி பத்து வருடம் ஆகிவிட்டது.

4. வீடு கட்டியதில் சின்னம்மா வள்ளியம்மை அவர்களின் செயினை முப்பையூரில் உள்ள கனரா வங்கியில் அடகு வைத்து வீட்டு வேலை மற்றும் திருமணத்தில் மொய் பணம் குறைவாக இருந்ததா காரணத்தால் அதற்காக செலவு செய்த விவரம் தெரியுமா என்றால் அவ்வாறு எதிர்மனுதாரர் அடகு எதுவும் வைக்கவில்லை.

5. எனது செயினை தான் எனது கணவர் அடமானம் வைத்தார்., அவருடைய சித்தி நகையை அடமான வைக்கவில்லை. எனது கணவர் மற்றும் அவரது அண்ணன். அண்ணி ஆகியோர்கள் மீது ஆர்.எஸ் மங்கலம் காவல் நிலையத்தில் எனது நகைளை மீட்டுத் தரும்படி தான் குறிப்பிட்டு புகார் அளித்துள்ளேன் எனது கணவர் எனது செயினை அடமான வைத்த விவரத்தை நான் அதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6 எனது கணவர் விவகாரத்து கோரி அனுப்பிய சட்ட அறிவிப்பில் எனக்கு 13 பவுன் நகையும் என் கணவருக்கு 2 பவுன் நகையும் சீர்வரிசையாக பணம் ரூ.22000/ ஆகியவைகள் சீதனமாக வழங்கப்பட்டதாக கண்டு மேற்படி சட்ட அறிவிப்பு அனுப்பபட்டதற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை.

7. தற்போது உங்கள் கணவருடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கீறீர்களா என்றால் எனது 13 1/2 பவுன் நகையை திரும்ப கொடுத்தால் நான் சேர்ந்து வாழத் தயார்.

எதிர் மனுதார் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.